12th December 1961]

Repairs of Tanks (North Arcot District)

* 2262 *Q.*—**Sri S. M. ANNAMALAI :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் 1960-1961-ம் ஆண்டுகளில் உணவு உற்பத்தித் துறையினரால் எத்தனை ஏரிகள் பழுதுபார்க்கப் பட்டன ?

(இ) அவைகளில் எத்தனை வேலைகள் டெண்டர் (Tender) இல்லாமல் விடப்பட்டன ? காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Forty-two repair works estimated to cost Rs. 3,45,670 were sanctioned during 1960–61 in North Arcot district. Information about the number of tanks actually repaired is being collected. It will be placed on the table of the House on receipt.

(*b*) Out of the forty-two repair works sanctioned, 8 were given on tender and the rest on nomination, because there is very poor response when tenders are called for and even nominations are difficult in this district.

Sri S. M. ANNAMALAI : ஸார், 42 திட்டங்களில், எட்டு திட்டங்கள்தான் டெண்டரில் விடப்பட்டன, குறைந்த டெண்டர் இருக்கும்போது அதிகமான டெண்டருக்குக் கொடுக்கப் பட்டதற்குக் காரணம் என்ன என்று விளக்கமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏதாவது குறிப்பாக ஒரு டெண்டரைப் பற்றிச் சொன்னால் விவரம் சொல்லலாம். டெண்டர் முடிவு செய்வது அதிகாரிகளின் பொறுப்பில் செய்யப் படுகிறது. ஏதாவது தவறு இருந்தால், குறிப்பாகச் சொன்னால், அதைக் கவனிக்கலாம்.

Sri V. K. KOTHANDARAMAN : ஏரிகளைப் பழுது பார்த்தால் மாத்திரம் போதாது; அவைகள் மேடிட்டுள்ளது. ஆகவே, அவற்றை தூர் எடுக்கும் கருவிகளைக் கொண்டு, ஆழப்படுத்த வேண்டும் என்று போன பட்ஜெட்டிலேயே ஒரு ரிபோர்ட் சமர்ப்பிக்கப்பட்டது. வட ஆர்காடு மாவட்டத்திலுள்ள ஏரிகளை ஆழப் படுத்துவது சம்மந்தமாக இதுவரை ஒன்றும் வரவில்லை. அப்படி அங்கே தூர் எடுக்கும் கருவிகளைக் கொண்டு ஆழப்படுத்துவதாக உத்தேசமா அல்லது அதை தொடர்ந்து விவசாயத்திற்கு விட்டு விட உத்தேசமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வருகிற பட்ஜெட் ஆண்டில், தூர் எடுக்கும் **(Desilting)** திட்டம் வட ஆற்காடு மாவட்டத்திலும் அமுல் நடத்துவது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.